*ஐரோப்பிய தமிழ் ஆவணக் காப்பகமும் ஆய்வகமும், ஐக்கிய இராச்சியம்*
**European Tamil Documentation and Research Centre, United Kingdom**

***இந்நிறுவனத்தின் அடிப்படை நோக்கம் என்ன?***
*புலம்பெயர்ந்த நாடுகளில் வாழும் தமிழர் மற்றும் தமிழர் அல்லாதவர்கள் ஈழத்தமிழர் மற்றும் புலம்பெயர்ந்த தமிழர் பற்றிய சமய, கலை, இலக்கிய, பண்பாட்டு, அரசியல் மற்றும் வரலாற்று மூலங்களை ஆவணப்படுத்தி வைப்பதும், அவை தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்ள முன்வரும் சர்வதேச ஆய்வாளர்களுக்கு உதவுவதும் இந்நிறுவனத்தின் அடிப்படை நோக்கமாகும். இந்நோக்கத்தை அடையஉதவும் நூலுருவிலும், ஒலி ஒளி வடிவிலும் வெளிவந்துள்ள ஆவணங்களை, அறிக்கைகளை, பிற ஆய்வேடுகளை சேகரித்துப் பாதுகாத்து வைத்தல் இந்நிறுவனத்தின் மற்றுமொரு பணியாகும்.*

***இந்நிறுவனத்தின் பயனீட்டாளர் யார்?***
*புலம்பெயர்ந்து வாழும் தமிழர்கள், புலம்பெயர்ந்த தமிழர்களின் இரண்டாம் தலைமுறை வழித்தோன்றல்கள் மற்றும் ஈழத்துத்; தமிழியல் தொடர்பான பல்வேறு ஆய்வுகளை மேற்கொள்ளும் கல்விசார் நிறுவனங்களினது ஆய்வு மாணவர்களும், தனிப்பட்ட ஆய்வாளர்களும்.*

***இந்நிறுவனத்தின் பயனீட்டாளர்களுக்கு அனுமதி இலவசமா?***
*ஐரோப்பிய தமிழ் ஆவணக் காப்பகமும் ஆய்வகமும் என்ற அமைப்பு ஒரு பொதுசன நூலகம் அல்ல. பிரித்தானிய அறக்கட்டளையாக* (Charity) *பதிவுசெய்யப்பட்டது. அதன் சேவைகள் அங்கத்துவம் பெற்றுக்கொண்ட ஆய்வாளர்களுக்கும், ஆய்வுத்தேவை கருதிய பயனீட்டாளர்களுக்கும் உரியது. இதன் பயனீட்டாளர்கள் தமது ஆய்வு நோக்கம் பற்றிய தெளிவான விபரங்களை முன்கூட்டியே வழங்கி, ஐரோப்பிய தமிழ் ஆவணக் காப்பகமும் ஆய்வகமும் என்ற எமது நிறுவனத்தில் தம்மை அங்கத்தவராகப் பதிவுசெய்துகொள்ள வேண்டும். நிறுவனம் முழுமையாக பொதுமக்களின் நிதிவருவாயில் தங்கியிருப்பதால், சமூக உணர்வுள்ளவர்களின் தனிப்பட்ட மற்றும் நிறுவனரீதியான தொடர்ச்சியான நிதி அன்பளிப்புகள் வேண்டப்படுகின்றன.*

***ஆய்வு மாணவர்கள் தமது ஆய்வுத்தேவைகளுக்காக தொடர்புகளை எவ்வாறு ஆரம்பிப்பது?***
*நீங்கள் உங்கள் ஆய்வுத்தேவைக்கு வேண்டிய முதனிலைத் தகவல்களை பெற்றுக்கொள்ள உதவும் வகையில் எமது நிறுவனத்தில் துறைசார் புலமைபெற்ற கற்றோர் அவை ஒன்று உள்ளது. ஆவணச்சேர்க்கைகளை எமது காப்பகத்தில் மட்டுமல்லாது, பிற தனிப்பட்ட சேகரிப்பாளரிடமும் சென்று பார்வையிடவும், கள ஆய்வு மற்றும் நேர்காணல்களுக்கான வசதிகளையும் செய்துதரவும்முடியும். உங்கள் ஆய்வுபற்றிய தெளிவான விடயங்களை அதற்குரிய விண்ணப்பப் படிவத்தினை நிரப்பி எமக்கு அனுப்புவதன்மூலம் எமது நிறுவனத்தில் இணைய முடியும். நிறுவனத்துடன் கீழ்க்கண்ட முகவரியில் தொடர்புகொண்டு விண்ணப்பப் படிவத்தை பெற்றுக்கொள்ளலாம்.*

N.Selvarajah, ETDRC, 14 Walsingham Close, Luton, LU2 7AP, United Kingdom

***நிறுவனத்தின் சேர்க்கைகள் எவ்வாறு மேற்கொள்ளப்படுகின்றன?***
*நிறுவனத்திற்கான சேர்க்கைகள் படைப்பாளிகளிடமிருந்தும், நூல் சேகரிப்பாளர்களிடமிருந்தும் அன்பளிப்புகளாகப் பெறப்படுகின்றன. தமது சேகரிப்புகளை எமது கல்விசார்அமைப்புக்கு வழங்க முன்வருவோரின் நூல்களை லண்டனுக்கு எடுப்பிப்பதற்கான செலவை அவர்களால் சுயமாக மேற்கொள்ள முடியாவிட்டால், அமைப்பின் ஆதரவாளர்கள் அச்செலவினைப் பொறுப்பேற்றுக்கொள்வார்கள். தேவைப்படுமிடத்து அத்தியாவசிய ஆவணங்களும் நூல்களும் விலைகொடுத்தும் கொள்வனவுசெய்யப்படும்.*

***நிறுவனத்தின் சேர்க்கைகள் எம்மொழிகளில் இருக்கும்? துறைசார்ந்த வரையறைகள் உள்ளனவா?***

*தமிழ், ஆங்கிலம் மற்றும் ஐரோப்பிய மொழிகளில் அமைந்த ஆவணங்கள் எமது காப்பகத்தில் சேகரிக்கப்படுகின்றன. ஈழத்தமிழர்கள் எழுதியவையும், ஈழத் தமிழர் சார்ந்ததாக பிற மொழியினர் எழுதியவையுமாக இவை அமையும். துறைசார்ந்த வரையறைகள் எதுவும் இல்லை. இவ்வாய்வு நிறுவனம் எவ்வித அரசியல், சமய, சமூக வரையறைகளுக்கும் உட்பட்டதல்ல. இந்நிறுவனம் வரவேற்கும் ஆய்வாளர்களும் அத்தகைய கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டவர்களுமல்ல. எனவே ஈழத்தமிழர் சார்ந்ததும், புலம்பெயர் தமிழர் சார்ந்ததுமான எவ்வகை ஆவணங்களும் இவ்வாவணக் காப்பகத்தில் ஏற்றுக்கொள்ளப்படும். பொதுவான தமிழ், தமிழர் தொடர்பான நூல்களும் (அகராதிகள், சங்க இலக்கியங்கள் போன்றவை) ஆய்வுத் தேவை கருதி எமது சேகரிப்புகளில் இடம்பெறும்.*

***நிறுவனத்துக்கும் அதன் வளர்ச்சிக்கும் சுயமாக நிதி வழங்க விரும்புவோருக்கான தகவல் என்ன?***

*இந்நிறுவனம் முற்றிலும் சமூக நோக்கம் கொண்ட ஒரு தொண்டு நிறுவனம். எவ்வித அரசியல், சமய, சமூக வரையறைகளுக்கும் கட்டுப்பாடுகளுக்கும் உட்படாதது. எனவே இந்நிறுவனத்தின் வளர்ச்சி, உலகத் தமிழ் இனத்தின் ஒரு பிரிவினரான ஈழத்தமிழ் இனத்தினதும் புலம்பெயர் தமிழர்களினதும் சமூக வரலாற்று விழுமியங்கள் மற்றும் இருப்பு பற்றிய தகவல்களை பாதுகாத்து தமிழர் அல்லாதவர்களுக்கும், புலம்பெயர்ந்த தமிழர் எதிர்காலத் தலைமுறையினருக்கும், வழங்குவதை அடிப்படை நோக்காகக் கொண்டது. இதன் ஆழமானதும் அறிவார்த்தமானதுமான தேவையை புரிந்துகொள்ளும் ஒவ்வொருவரும் தம்மை இவ்வமைப்பின் பங்காளர்களாக இணைத்துக்கொள்ளவேண்டும் என்பதே எமது விருப்பமாகும். அவ்விருப்பத்தை நிறைவேற்ற அடிப்படைத் தேவையான தனியான கட்டிட வசதி, நூல்சேர்க்கை, தளபாடம் மற்றும் ஆளணித் தேவைகளுக்காக போதிய நிதிவசதியை மாதாந்தம் அல்லது தனியொரு நன்கொடையாக எவரும் வழங்கலாம். உங்கள் உதவு தொகை எவ்வித குறைந்த பட்ச, அதிக பட்ச வரையறைகளையும் கொண்டதல்ல. உங்களாலான தொகையை வழங்கலாம். சிறுதுளி பெருவெள்ளம்.*

***வங்கிக் கணக்கு விபரம்:***

Bank Name:  Santandar
Account Name : ETDRC
Sort Code : 09-01-27
Account No : 24459051
IBAN: GB93ABBY09012724459051 (for international transfer)

***இந்நிறுவனத்திற்கான நூல்கள் வழங்குவோருக்கான தகவல்:***

*(இங்கே ஆவணங்கள் என்ற சொற்பதம் நூல்கள், சஞ்சிகைகள், அறிக்கைகள், கையெழுத்துப் பிரதிகள், அச்சுருவில் வெளிவந்த, வெளிவராத பல்கலைக்கழக மற்றும் கருத்தரங்க ஆய்வுக் கட்டுரைகள், ஒலி ஒளிப்பதிவுகள் மின்னூல்கள் அனைத்தையும் குறிக்கும்.)*
*தமிழ் ஆங்கிலம் சிங்களம் மற்றும் ஐரோப்பிய மொழிகளில் ஈழத்தமிழர் மற்றும் புலம்பெயர் தமிழர் தொடர்பானதுமான ஆவணங்கள்.*
*இலங்கையைப் பிறப்பிடமாகக்கொண்ட தமிழர்கள் எம்மொழியிலும் எழுதிய ஆவணங்கள்.*
*தமிழ், தமிழர் பற்றிய அடையாளங்களை விளக்கும் பன்னாட்டு ஆவணங்கள்*
*மேற்கண்ட அனைத்தும் எமது சேர்க்கைகளுக்காக ஆதரவாளர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.*

***ஆவணங்களை அனுப்ப வேண்டிய முகவரி:***

N.Selvarajah, ETDRC, 14 Walsingham Close, Luton, LU2 7AP, United Kingdom

இலங்கையிலிருந்து தமது தனிப்பட்ட சேகரிப்பான ஆவணங்களை அன்பளிப்பாக வழங்க விரும்புவோர் லண்டனுக்கு அவற்றை அனுப்பும் தபால் மற்றும் கப்பல் செலவை ETDRC பொறுப்பேற்க வேண்டும் என்று எதிர்பார்த்தால் அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

தமது சேகரிப்புகளை ஒரு குறித்த விலைக்கு விற்பனை செய்ய விரும்பும் சேகரிப்பாளர் தமது ஆவணங்களின் பட்டியல் ஒன்றையும் அதற்கு எதிர்பார்க்கும் பணத்தொகையையும் குறிப்பிட்டு எழுத்து மூலமாக எம்முடன் தொடர்பு கொள்ளவேண்டும். இத்தகைய நிலையில் ஆவணங்கள் தேர்வுசெய்யப்பட்டே கொள்வனவு செய்யப்படும். எமது ஆய்வகம் ஒரு தர்ம ஸ்தாபனமாகையினால் வர்த்தகரீதியில் தனிநபர்கள் நூல்களை லாபநோக்கம் கருதி விற்பனை செய்வது தவிர்க்கப்படும்.

எமது இந்தக் கல்விசார் சமூக அமைப்பின் பணியின் தேவையை உளப்பூர்வமாக உணர்ந்துகொண்ட ஒவ்வொருவரும் ஏதோ ஒருவகையில் தம்மாலான உதவியை நல்கவேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும். யாரோ ஒருவர் எதற்காகவோ செய்கிறார்கள் என்றிராமல் எமக்காக நாமே கட்டியெழுப்பவேண்டிய ஈழத்தமிழர் அறிவியல் இல்லம் இது. அதற்கான அத்திவாரத்தை ஆரவாரமின்றி அமைத்திருக்கிறோம். இதனைக் கட்டி எழுப்பவேண்டியது இதனை வாசிக்கும் வாய்ப்புக் கிட்டியுள்ள உங்கள் ஒவ்வொருவரதும் கடமையாகும். இக்கடமையிலிருந்து விலகிச்செல்ல முனையும் எவரும் எமது இனத்தின் எதிர்காலம் பற்றிய அக்கறையற்றவர்களே.

நன்றி

என்.செல்வராஜா
ஸ்தாபக இணைப்பாளர்
ஐரோப்பிய தமிழ் ஆவணக்காப்பகமும் ஆய்வகமும்.